# இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

# விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுக்கான அழைப்பு

## துணை வேந்தர் பதவி

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆவது பிரிவின்படி செயற்படும் இலங்கை வயம்பப் பல்கலைக்கழகத்தின் பேரவை மற்றும் அதன் அடுத்தடுத்த திருத்தங்கள் மற்றும் ஏப்ரல் 10, 2023 இன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண். 03/2023 இன் விதிகளின்படி 05.12.2024 முதல் 31.12.2024 வரை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதிவிக்கான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அல்லது பரிந்துரைகள் அழைக்கப்படுகின்றன.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைவாக, துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர உத்தியோகத்தராவார். துணைவேந்தரே பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, முதன்மை கல்வி அதிகாரி மற்றும் கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பனவற்றின் பதவி வழி உறுப்பினரும், தலைவரும் ஆவார்.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம் துணைவேந்தர் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது பதவியைக் கைவிட்டுச் சென்றால் தவிர மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது அறுபத்தைந்து (65) வயதைப் பூர்த்தி செய்யும் நாள், இவ்விரண்டில் எது முன்வருகிறதோ அதுவரை பதவி வகிப்பார்.

விண்ணப்பதாரர்கள்/ பெயர் மொழியப்பட்டவர்கள் அறுபத்து மூன்று (63) வயதிற்குட்பட்ட இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

துணைவேந்தர், கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்குதல், முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்துதல், நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுக்கு பொறுப்பானவர் என்பதோடு பேரவை தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்கு பொறுப்பானவராகவும், கல்வியின் உன்னதம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக முகாமைத்துவம் மற்றும் சார்பு நிலையற்ற திறமிகு தலைமைத்துவம் ஆகியவற்றை நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

சித்திகரமான அபேட்சகர் வலிமையான ஆராய்ச்சி பின்புலத்துடன், நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ குணங்கள் மற்றும் பலதரப்பட்ட ஆர்வமுள்ள குழுக்களுடன் புறநிலையாக தொடர்புகொள்வதற்கான தனிப்பட்ட திறன்கள், கொள்கை சிக்கல்கள் பற்றிய தெளிவான புரிதல் மற்றும் முடிவுகளை திறம்பட செயற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு உள்ளிட்ட உயர் கல்வி சாதனைகளின் பதிவைக் கொண்டிருக்க வேண்டும். சமூகத்திற்கான அர்ப்பணிப்பு உட்பட பல்கலைக்கழகத்தின் நெறிமுறைகள் மற்றும் பணி பற்றிய ஆழமான புரிதலையும் அவர் கொண்டிருக்க வேண்டும்.

துணைவேந்தர், மிக உயர்ந்த கல்விச் சம்பள அளவைப் பெறுவதற்கும், சம்பளத்தில் 15% பொழுதுபோக்குக் கொடுப்பனவாகப் பெறுவதற்கும் பதவிக்குப் பொருந்தக்கூடிய பிற கொடுப்பனவுகளைப் பெறுவதற்கும் தகுதியுடையவர்.

**விண்ணப்பங்கள் அல்லது பெயர் முன்மொழிவுப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

1. பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கான தொலைநோக்கு அறிக்கை, துணைவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் என்ன சாதிக்க வேண்டும் என்பதற்கான சுருக்கமான விவரம் மற்றும் பிறந்த தேதி விண்ணப்பதாரரின் / பெயரிடப்பட்டவரின் முழுமையான சுய தரவு மற்றும் இதற்குப் புறம்பாக மேற்கூறிய ஆவணங்களின் மென் பிரதி மற்றும் ஏனைய ஆவணங்களின் பிரதிகளை PDF வடிவத்தில் registrar@wyb.ac.lk எனும் மின்னஞ்சல் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.
2. தற்போதைய துணைவேந்தர் விண்ணப்பதாரராக இருந்தால் அல்லது இதற்கு முன்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பதவி வகித்திருந்தால், மேற்படி 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுக்கு புறம்பாக அவர் தனது முதல் பதவிக் காலத்தில் செய்த சாதனைகளை முன்னிலைப்படுத்தும் அறிக்கையை அளிக்க வேண்டும். இந்த அறிக்கையின் மென் பிரதியை PDF வடிவத்தில் registrar@wyb.ac.lk எனும் மின்னஞ்சல் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.
3. பெயர் முன்மொழிவு என்பதானால் பெயரிடப்படுபவரின் விருப்பம் சகிதமான கடிதம்.
4. விண்ணப்பதாரர் / பெயரிடப்பட்டவர் பொதுச் சேவை, கூட்டுத்தாபனம், சட்டப்பூர்வ அமைப்பு மற்றும் இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம் அல்லாத உயர் கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் பட்சத்தில், அவர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரர் / பெயரிடப்பட்டவரை இச்சந்தர்ப்பத்தில் விடுவிக்கப்பட முடியுமா என்பதைக் குறிக்கும் தொழில்தருநரின் ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள் /பெயர் முன்மொழிவுகளை **“பதிவாளர், பேரவை செயலாளர், பதிவாளர் அலுவலகம், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம், குளியாப்பிட்டிய”** என்ற முகவரிக்கு 2024-12-31ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும் வகையில் நேரில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம்/பெயர் முன்மொழிவுகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மூலையில் **“துணைவேந்தர் பதவி”** என்று குறிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி நாளுக்குப் பின் இரண்டு மாதங்களுக்குள் விசேட சபைக் கூட்டம் கூட்டப்படும் என்பதுடன் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்விற்காக விசேட சபைக் கூட்டத்திற்கு முன் விண்ணப்பதாரர் தனிப்பட்ட ரீதியில் அழைக்கப்படுவர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதள இணைப்பைப் பார்வையிடுவதன் மூலம் விவரங்களைப் பெறலாம். https://www.ugc.ac.lk/index.php?option=com_content&view=article&id=2442%3Acommission-circular-no-032023-appointment-to-the-post-of-vicechancellor&catid=190%3Acirculars-published-in-2023-012023-and-above&Itemid=20&lang=en.

மதிப்பீட்டுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்களுக்கு ஆனால் பதினைந்து (15) நிமிடங்களுக்கு விஞ்சாத ஒரு சுருக்கமான விளக்கக்காட்சிக்காக (Presentation) சிறப்பு பேரவை கூட்டத்திற்கு முன் அழைக்கப்படுவார்கள், எந்தவொரு வேட்பாளரும் சிறப்பு பேரவை கூட்டத்திற்கு முன் தோன்ற முடியாத நிலையில், செயலாளருக்கு முன்னறிவிப்பொன்றைச் செய்வதன் பேரில் அவர் நிகழ்நிலை முறையின் (Virtual mode) மூலம் விளக்கக்காட்சியை வழங்க அனுமதிக்கப்படலாம்.

மூன்று அபேட்சகர்களின் பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டு விசேட பேரவை கூட்ட அறிக்கையைத் தயாரித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் காட்டப்பட்டுள்ள சகல ஆவணங்களுடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்படுகின்றது.

**பேரவைச் செயலாளர் மற்றும் பதிவாளர்,**
**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்.**
**2024-12-05.**